# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 17–ஆம் நாள் வியாழன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 01–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.86/2016 –ல்**

**இடைநிலை மனு எண்.1/2023**

**S.அழகேசன் ... மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**1. சுப்புலட்சுமி**
**2. உமாராணி**
**3. சித்ரா**
**4. கலா**
**5. சாந்தா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

**6.B. சண்முகம் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசத்தரப்பினர்.**

இந்த மனு இன்று (17.07.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.C.ஜெயபிரகாசம்** அவர்களும் 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்தப்பின் 01 முதல் 06 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

**06**-ஆம் எதிர்மனுதாரர் சண்முகத்தை முதலேற்பு வழக்கில் **06**-ஆம் பிரதிவாதியாக சேர்க்கக் கோரி உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் **01**-ஆம் வகுமுறையின் **10(2)**-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/ வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் பிரதிவாதிகள் ஆவர். வழக்குச் சொத்துக்களை பொருத்து 1/6 பாகத்திற்கு பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்த வழக்கிற்குமுன் மனுதாரர்/வாதி ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2015-ஆம் ஆண்டு ஒரு வழக்குத் தொடுத்திருந்தார் அந்த வழக்கு இந் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு முதலேற்பு வழக்கு எண்.193/2018-ஆக நிலுவையில் இருக்கிறது.

03. மனுதாரர்/வாதி வாதித் தரப்பு 01-ஆம் சான்றாளராக சாட்சியம் அளித்தார். அவரை 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைசெய்தனர். வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்குப் போடப்பட்டுள்ளது. 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல்செய்த பின் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சில ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு கோரி மனுதாரர்/வாதி அறிவிப்பு கொடுத்தார். அதாவது

02 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் மகனான 06-ஆம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் அறுதியாவணத்தையும் 03 விருப்பாவணங்களையும் தாக்கல்செய்யக் கோரினார். ஆனால், 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவற்றைத் தாக்கல் செய்யவில்லை. 27.11.2009-ஆம் தேதியிட்ட அறுதியாவணம் என்று சொல்லப்படும் ஆவணம் குறுக்குவிசாரணையின்போது வாதியிடம் காட்டப்பட்டது. விருப்பாவணங்கள் எதுவும் இன்று வரை ஒப்படைக்கப் -படவில்லை.

04. 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை பரிசீலித்தபோது வழக்கை சரியான திசையில் நடத்தவும் பல்முனை வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கவும் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விருப்பாவணங்கள் குறித்தும் அறுதியாவணம் குறித்தும் விளம்புகை பரிகாரம் கோர வேண்டியுள்ளது. 27.11.2009-ஆம் தேதியிட்ட அறுதியாவண கொடைப் பெறுநராக இருக்கும் சண்முகத்தை இந்த வழக்கில் 06-ஆம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால், அவரை முதலேற்பு வழக்கில் 06-ஆம் பிரதிவாதியாக சேர்த்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**(i) 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிருரையின் சுருக்கம்.**

05. 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 02.11.2016-ஆம் தேதியன்று தாக்கல்செய்த எதிர்வழக்குரையில் வழக்குச்

சொத்துக்களை பொருத்து அதன் உரிமையாளர் சித்தையன் நிறைவேற்றிய அறுதியாவணம் குறித்தும் விருப்பாவணம் குறித்தும் சொல்லப் பட்டுள்ளது. 27.11.2009-ஆம் தேதியன்று 02-ஆம் பிரதிவாதியின் மகன் சண்முகத்திற்கு சித்தையன் எழுதிக் கொடுத்த அறுதியாவணத்தில் மனுதாரர்/வாதி சான்றொப்பம் இட்டுள்ளார். அந்த அறுதியாவணம் தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டபோதும் மனுதாரர்/வாதி அதில் சான்றொப்பம் இட்டுள்ளார். அன்றே அந்த ஆவணம் குறித்து மனுதாரர்/வாதிக்கு தெரியும். 2016-ஆம் ஆண்டு எதிர்வழக்குரை தாக்கல்செய்யப்பட்டவுடன் மனுதாரர்/வாதி ஆவணங்கள் கோரி அறிவிப்புக் கொடுக்கவில்லை. 24.02.2022-ஆம் தேதியன்றுதான் அவ்வாறு அறிவிப்புக் கொடுத்தார். விருப்பாவணங்கள் குறித்தும் அறுதியாவணம் குறித்தும் மனுதாரர்/வாதிக்கு ஆரம்பத்தில் இருந்தே தெரிந்திருந்தும் அவை சம்மந்தமாக உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காமல் காலம் கடந்து காலவரம்பு முடிந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இந்த மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய -வேண்டும்.

06. 06-ஆம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டார்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

07. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

08. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்கு 01 முதல் 04 வரையிலான இனச் சொத்துக்களில் 1/6 பாகத்திற்கு பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கு எண்.86/2016-என்ற வழக்கை தாக்கல்செய்திருக்கிறார். வழக்குச் சொத்தில்லாத வேறுறொரு சொத்தை பொருத்து மனுதாரர்/ வாதியின் தகப்பனார் சித்தையன் மனுதாரர்/வாதியின் நலச்சார்பாக அறுதியாவணம் எழுதி வைத்து பின்னிட்டு இரத்துச் செய்தது செல்லாதது என்று விளம்புகைச் செய்யக் கோரி ஓமலூர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்/வாதி கொடுத்த முதலேற்பு வழக்கு எண் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு முதலேற்பு வழக்கு எண்.193/2018-ஆக நிலுவையில் இருந்து -வருகிறது. இரு வழக்குகளும் ஒரே நேரத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

09. முதலேற்பு வழக்கு எண்.86/2016-ல் 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 02.11.2016-ஆம் தேதியன்று எதிர் வழக்குரை தாக்கல்செய்துள்ளனர். எதிர்வழக்குரையின் 06-ஆம் பத்தியில் வழக்கு 01-ஆம் இனச் சொத்தைப் பொறுத்து சித்தையன் 02-ஆம் எதிர்மனுதாரரின் மகனான 06-ஆம் எதிர்மனுதாரர் சண்முகத்திற்கு அறுதியாவண கொடைக் கொடுத்து ஆவணம் எழுதிப் பதிவுசெய்துக் கொடுத்துள்ளார் என்றும் அந்த ஆவணத்தில் மனுதாரர்/வாதி சான்றொப்பம் செய்துள்ளார் என்றும் திட்டவட்டமாக கூறியுள்ளனர். வாதி தரப்பு 01-ஆம் சான்றாளராக சாட்சியம் அளித்த மனுதாரர்/வாதி அழகேசனை 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது 27.11.2009-ஆம் தேதியன்று 06-ஆம் எதிர்மனுதாரர்

சண்முகத்தின் நலச்சார்பாக நிறைவேற்றப்பட்ட அறுதியாவணத்தில் தான் (மனுதாரர்/வாதி) சான்றொப்பம் இட்ட சங்கதியையும் அந்த அறுதியாவணம் குறித்து 2009-ஆம் ஆண்டேத் தனக்குத் தெரியும் என்ற சங்கதியையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

10. எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சான்றாவணங்களை கோரி உடனடியாக 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு அறிவிப்புக் கொடுத்ததுபோன்று மனுதாரர் மனுவில் சொல்லியுள்ளார். ஆனால், 25.12.2022-ஆம் தேதியன்றுதான் அத்தகைய அறிவிப்பை கொடுத்துள்ளார். அறிவிப்புக் கொடுத்தும் ஆவணங்களை கொடுக்காததால்தான் தன்னால் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று மனுதாரர்/வாதி கூறியுள்ளது ஏற்புடையதாக இல்லை.

11. காலவரம்புச் சட்டத்தின் அட்டவணையின் 03-ஆம் பகுதியில் விளம்புகை பரிகாரம் கோருவதற்கான காலவரம்பு குறித்து 56-ஆம் உறுப்பில் இருந்து 58-ஆம் உறுப்புவரை சொல்லப்பட்டுள்ளது. 56-ஆம் உறுப்பு இந்த வழக்கிற்கு பொருந்தும் என்று கருதினால் பதிவு செய்யப்பட்டது குறித்து வாதிக்குத் தெரியவந்த நாளில் இருந்து 03 ஆண்டு காலத்திற்குள் வழக்கிட வேண்டும். வாதத்திற்காக 58-ஆம் உறுப்பு இந்த வழக்கிற்கு பொருந்தும் என்று கருதினால் வழக்கிடுவதற்கான உரிமை முதன்முதலில் ஏற்பட்டதிலிருந்து 03 ஆண்டுக்குள் விளம்புகை பரிகாரம் கோரும் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும். மனுதாரர்/வாதி குறுக்கு விசாரணையில் தெளிவாக 27.11.2009-ஆம் தேதியன்று அறுதியாவணம் ஏற்பட்டது குறித்து அன்றே தனக்கு நன்றாக தெரியும் என்று ஒப்புக்

-கொண்டுள்ளார். பாகப்பிரிவினை கோரும் இந்த வழக்கே 2016-ஆம் ஆண்டுதான் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

12. 06-ஆம் எதிர்மனுதாரர் சண்முகத்திற்கு சித்தையன் அறுதியாவண கொடையாகக் கொடுத்தச் சொத்து சித்தையனின் சுயசம்பாத்திய சொத்து என்பதை மனுதாரர்/வாதி வழக்குரையிலேயே திட்டவட்டமாக ஒப்புக் -கொண்டுள்ளார். இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்ட காலத்திலேயே 06-ஆம் எதிர்மனுதாரர் சண்முகத்தின் நலச்சார்பாக 27.11.2009-ஆம் தேதியன்று ஏற்பட்ட அறுதியவாணத்தை இல்லா நிலையதென்றோ செல்லாது என்றோ விளம்புகை செய்யுமாறுக் கோரி இருக்க முடியாது. இந் நிலையில் அதையும் தாண்டி 2023 ஆண்டு அந்த அறுதியாவண ஆவணத்தை இல்லா நிலையதென்று விளம்புகை செய்யக் கோரும் பரிகாரத்தை வழக்குரையில் புகுத்ததுவதற்காக 06-ஆம் எதிர்மனுதாரர் சண்முகத்தை இந்த வழக்கில் 06-ஆம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்று கோருவது ஏற்புடையதாக இல்லை என்றும் அவருக்கு எதிராக கோரப்படும் பரிகாரம் காலவரம்புச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளதால் அவரை இந்த வழக்கில் அவசிய தரப்பினராகவோ தேவையான தரப்பினராகவோ சேர்த்து ஆணையிட முடியாது என்றும் இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. இந்த மனுவிலும் எதிர்வழக்குரையிலும் சொல்லப்பட்டுளள 03 விருப்பாவணங்கள் சம்மந்தமாக பரிகாரம் கோருவது குறித்து இந்த ஆணையுரையில் சொல்லப்பட்டுள்ளது எதுவும் பொருந்தாது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

14. இறுதியாக, இந்த மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 17–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.01/2023 in
மு.வ.எண்.86/2016
நாள் 17.07.2025